வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 19.02.2026 நேரம் மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- ஏஐ தொழில்நுட்பத்தை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான கருவியாக மாற்றும் வகையில், ஜனநாயக மயமாக்க வேண்டியதன் அவசியத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- மனிதர்களை மையமாக கொண்ட செயற்கை நுண்ணறிவை கட்டியமைப்பதில், இண்டியா ஏஐ இம்பேக்ட் மாநாடு, அதி முக்கிய பங்களிக்கும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.
- மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நாளை அசாமில், எல்லைப்புற பாதுகாப்பு நிலவரங்களை பார்வையிடுகிறார்.
- புதுச்சேரியில், 10 நாள் சுற்றுலா பொருட்காட்சியை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று மாலை தொடக்கி வைக்கிறார்.

----------------------

<u>*மோடி ஏஐ 1 (9)*</u>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை, குறிப்பாக தெற்குலக நாடுகளில், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, மற்றும், அதிகாரப் பங்கேற்பிற்கான கருவியாக மாற்றும் வகையில், ஜனநாயக மயமாக்க வேண்டியதன் அவசியத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார். இன்று புதுடெல்லி பாரத் மண்டபத்தில், செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்த, இண்டியா ஏஐ இம்பேக்ட் உச்சி மாநாட்டை, அவர் தொடக்கி வைத்து பேசுகையில், ஒட்டுமொத்த உலகின்

பொது நன்மைக்கு, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த, கூட்டு மனஉறுதி அவசியம் என்றார்.

*மோடி ஏஐ 2 (19)*

(வாய்ஸ்)

உலகிலேயே தொழில்நுட்பம் பயின்ற இளைஞர்கள் அதிகம் உள்ள நாடான இந்தியாவில், புதிய தொழில்நுட்பங்கள் விரைந்து உருவாக்கப்பட்டு, உடனுக்குடன் ஏற்கப்படுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். மனிதகுல வரலாற்றில், முக்கிய திருப்பங்களில் ஒன்றாக ஏஐ திகழ்வதாகவும், இயந்திரங்களுக்கு நுண்ணறிவு புகட்டுவதால், மனிதனின் திறன்கள் பல மடங்கு அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை, நன்னெறிகளின் அடிப்படையில், பொறுப்பான நிர்வாகம், தேசிய இறையாண்மை, மற்றும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி உள்ளிட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்துவதே, இந்தியாவின் MANAV கொள்கை என்றும், நவீன ஏஐ யுகத்தில், மனிதகுலத்தின் நன்மைக்கான முக்கிய இணைப்பாக, இக்கொள்கை திகழும் என்றும் பிரதமர் கூறினார். அணுசக்தியை போலவே, நன்மை-தீமை இரண்டுக்கும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த முடியும் என்பதால், சரியான திசையில், சரியான தீர்வுகளை நோக்கி, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். செயற்கை நுண்ணறிவு மூலம், போலிப் படங்கள், மற்றும் பொய்த் தகவல்கள் உருவாக்கப் படுவதை தடுக்க, உலக அளவிலான தரக் கட்டுப்பாடுகள் தேவை என்றும், பாடத் திட்டத்தை கவனமாக உருவாக்குவதை போல, குழந்தைகள், மற்றும், குடும்பங்களின்

*மோடி ஏஐ 3 (10)*

பாதுகாப்பை கருத்தில் கொண்டு, ஏஐ தரக் கட்டுப்பாடுகளை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில், செமி கண்டக்டர் முதல், பாதுகாப்பான தரவு மையங்கள் வரை, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா அம்சங்களும், தற்போது உருவாகி வருவதாக, பிரதமர் தெரிவித்தார். பலவித மக்களும், பல்வகை கலாச்சாரங்களும் அடங்கிய இந்தியாவில் வெற்றி பெறக் கூடிய ஏஐ மாடல்கள், உலக அளவிலும், வெற்றி பெற முடியும் என்பதை கருத்தில் கொண்டே, இந்தியாவில் உருவாக்குவோம்-உலகிற்காக உருவாக்குவோம் என்ற கொள்கையுடன் அரசு செயல்பட்டு வருவதாக, அவர் மேலும் குறிப்பிட்டார்.

*மோடி ஏஐ 4 (4)*

பிரெஞ்ச் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன், ஐநா தலைமைச் செயலர் திரு. அண்டோனியோ குட்டரேஸ், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோர், ஏஐ இம்பேக்ட் உச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

----------------------

*மோடி முழு அமர்வு* (16)

பின்னர் மாநாட்டின் முழு அமர்வில், பிரதமர் திரு. நரேந்திர மோடி பேசுகையில், மனிதகுல மாண்புகளை உள்ளடக்கிய வகையில், புதுமைப் படைப்புகளுடன் கூடிய, ஏஐ எதிர்காலம் ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். தொழில்நுட்பமும், மானுட நம்பிக்கையும் கைகோர்க்கும் போது, செயற்கை நுண்ணறிவின் நிஜமான தாக்கங்கள் உலகிற்கு வெளிப்படும் என்றும் அவர் கூறினார். செயற்கை நுண்ணறிவால், எல்லா நாடுகளும் பயன்பெற வேண்டும் என்பதும், அனைவரும் அணுகத் தக்கதாக, செயற்கை நுண்ணறிவு திகழ வேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார். செயற்கை

நுண்ணறிவின் உலகப் பயணத்தில், இந்தியாவின் பங்கு மிகப் பெரியதாக இருக்கும் என்றும், மனிதர்களை மையமாக கொண்ட செயற்கை நுண்ணறிவை கட்டியமைப்பதில், இண்டியா ஏஐ இம்பேக்ட் மாநாடு, அதிமுக்கிய பங்களிக்கும் என்றும் அவர் கூறினார். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மேம்பாடு, மற்றும், பயன்பாட்டில், பாதுகாப்பிற்கான, தெளிவான விதிமுறைகள், வெளிப்படையான முறையில் இடம்பெறுதல் அவசியம் என்று, பிரதமர் மேலும் வலியுறுத்தினார்.

---------------------

<u>*சிவாஜி மகராஜ்* (10)</u>

சத்ரபதி சிவாஜி மகராஜ் பிறந்த நாளான இன்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர், அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளனர். சுயராஜ்ய சிற்பியான சிவாஜி மகராஜ், தர்மத்தின் காவலராகவும், மக்களை மையமாக கொண்ட, ஆளுகையின் நாயகராகவும் திகழ்ந்தவர் என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். தலை சிறந்த நிர்வாகியும், போர்த் தந்திர அறிஞரும், தொலைநோக்குத் தலைவருமான சத்ரபதி சிவாஜி மகராஜ்-ன் துணிச்சல், நாட்டு மக்களிடையே, சுயமரியாதை, மற்றும், நீதியை வலுப்படுத்துவதில், தொடர்ந்து உணர்வூக்கமாக திகழும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊகடத்தில் கூறியுள்ளார்.

---------------------

<u>*கிஷண் ரெட்டி* (6)</u>

நீடித்த எதிர்காலத்திற்கான இந்தியாவின் முக்கிய கனிமங்கள் நிலவரம் என்பது குறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மாநாட்டில், மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி உரையாற்றினார். இந்தியாவில், முக்கிய கனிம வளங்களை

கண்டுபிடிக்கும் பணிகளை மேற்கொள்ள, 41 தனியார் ஏஜென்சிகளுக்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளதாக, அவர் கூறினார்.

---------------------

அமித் ஷா 1 (2)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, 2 நாள் பயணமாக நாளை அசாம் செல்கிறார்.

அமித் ஷா 2 (10)

(வாய்ஸ்)

இந்தியா-பங்களாதேஷ் எல்லைப்புற கிராமங்களில், பாதுகாப்பு ஏற்பாடுகளையும், சட்டவிரோத குடிபெயர்வை தடுப்பதற்கான வேலி அமைக்கும் பணிகளில் எட்டப் பட்டுள்ள முன்னேற்றங்களையும், மத்திய உள்துறை அமைச்சர் நாளை நேரடியாக பார்வையிடுகிறார். சில்சாரில் இருந்து, எல்லைப்புற பகுதிகளுக்கான, துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் 2ஆம் கட்டப் பணிகளை, அவர் தொடக்கி வைக்கிறார். வரும் சனிக்கிழமை குவஹாத்தியில், மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் 87ஆவது உதய நாள் அணிவகுப்பை அவர் பார்வையிடுவார் என்றும், இத்தகைய அணிவகுப்பு, வடகிழக்கு பிராந்தியத்தில் நடத்தப்படுவது இதுவே முதல்முறை என்றும், அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------

பீகார் நக்சல் (6)

பீகார், நக்சல்வாதம் இல்லாத மாநிலமாக அறிவிக்கப் பட்டுள்ளது. பீகாரில், கடைசி மாவோயிஸ்டாக கருதப்பட்ட சுரேஷ் கோடா, இன்று முங்கேர் பகுதியில், போலீசாரிடம் சரணடைந்ததாக, காவல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். பீகாரில், முன்பு நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டு இருந்த 23 மாவட்டங்களில் தற்போது, எந்தவொரு மாவட்டத்திலும் மாவோயிஸ்ட்டுகள் இல்லை என்றும், அதிகாரிகள் கூறினர்.

---------------------

*புதுச்சேரி பொருட்காட்சி (16)*

புதுச்சேரியில், சுற்றுலாத் துறை, தொழில்-வணிகத் துறை, பிப்டிக் நிறுவனம், மற்றும், சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இணைந்து, முதல் முறையாக ஏற்பாடு செய்துள்ள சுற்றுலா பொருட்காட்சியை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று மாலை தொடக்கி வைக்கிறார். பழைய துறைமுக வளாகத்தில் நடைபெறும் இந்த 10 நாள் கண்காட்சியில், 25க்கும் மேற்பட்ட அரசுத் துறைகளின் அரங்குகளும், 140க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்களின் கடைகளும், மகளிர் சுய உதவிக் குழுவினர், மற்றும், முன்னணி சமையல் கலைஞர்களின் தனித்துவமான உணவகங்களும், குழந்தைகளுக்கான பொழுது போக்கு விளையாட்டு அம்சங்களும் இடம்பெறுகின்றன. நாள்தோறும் மாலையில், பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. கண்காட்சியின் தொடக்க விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மற்றும் தொழில்-வணிகத்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், பொதுப் பணி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் உள்ளிட்டோர் கலந்து கொள்கிறார்கள். கண்காட்சிக்கு அனுமதி இலவசம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------

*காரைக்கால் என்ஐடி* (13)

காரைக்காலில் இன்று நடைபெற்ற, புதுச்சேரி என்ஐடி-உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு, இளங்கலை-முதுகலை, மற்றும், ஆராய்ச்சிப் படிப்பு முடித்த 297 மாணவர்களுக்கு, பட்டங்களையும், படிப்பில் முதலிடம் பெற்றவர்களுக்கு பதக்கங்களையும் வழங்கி சிறப்பித்தார். இளைஞர்கள், அறிவியல்-தொழில்நுட்ப ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு, சமூகத்திற்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தையும், ஒற்றுமையை வளர்ப்பதில், கல்வியின்

முக்கியத்துவத்தையும், அவர் தமது உரையில் வலியுறுத்தினார். என்ஐடி இயக்குநர் டாக்டர் மகரந்த் மாதவ் காங்ரேக்கர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு.ஆர். செல்வம், அமைச்சர் திரு. பி.ஆர்.என். திருமுருகன், பெங்களூர் C-DAC நிர்வாக இயக்குநர் திரு. சுதர்சன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

---------------------

<u>தொழிலாளர் உறவு (5)</u>

புதுச்சேரியில், தொழிலாளர் நல்லுறவு, மற்றும், 4 புதிய தொழிலாளர் சட்டங்கள் குறித்து, இன்று நடைபெற்ற 1 நாள் பயிற்சி முகாமை, தொழிலாளர் துறைச் செயலர் திருமதி ஆர். ஸ்மிதா, தொடக்கி வைத்தார். புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள 16 சிறிய-நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களில் இருந்து, நூற்றுக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

---------------------

<u>தேமுதிக (6)</u>

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான திமுக கூட்டணியில், தேமுதிக இணைந்துள்ளது. திமுகவுடன், தேமுதிக-விற்கு கூட்டணி அமைவது இதுவே முதல்முறை என்று, தேமுதிக பொது செயலர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். தேமுதிக ஏற்கனவே, அஇஅதிமுக-வுடன் பலமுறை கூட்டணி அமைத்து, சட்டமன்றத் தேர்தலை சந்தித்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------

<u>கிரிக்கெட் (9)</u>

உலகக் கோப்பைக்கான ஐசிசி ஆடவர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்று மாலை சென்னையில் நடைபெறும் போட்டியில், ஆப்கானிஸ்தான்-கனடா அணிகள் மோத உள்ளன. முன்னதாக, வெஸ்ட் இண்டீஸ்-இத்தாலி அணிகளுக்கு இடையே, கொல்கத்தாவில் நடைபெற்ற

போட்டியில், வெஸ்ட் இண்டீஸ் அணி, 42 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கொழும்பில் நடைபெறும் மற்றொரு போட்டியில், இலங்கை அணியால் நிர்ணயிக்கப்பட்ட, 179 ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி, 2ஆவதாக ஆடும் ஜிம்பாப்வே அணி, சற்று முன்வரை, ----- ஓவர்களில், ---- விக்கெட் இழப்பிற்கு, ----- ரன் எடுத்து இருந்தது.

---------------------

<u>*வானிலை* (12)</u>

இன்று நிலநடுக்கோட்டு இந்தியப் பெருங்கடல், மற்றும், அதை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவும், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, இலங்கையை நோக்கி நகர்ந்து, அடுத்த 24 மணி நேரத்தில், வலுவிழக்கக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதேசமயம் அடுத்த 24 மணி நேரத்தில், நிலநடுக்கோட்டு இந்தியப் பெருங்கடல் மற்றும் அதை ஒட்டிய தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில்,காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இன்றைய தினம் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், நாளை, தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல், மிதமான மழை இருக்கலாம் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------

<u>*புவி அறிவியல்* (12)</u>

மத்திய புவி-அறிவியல் துறை அமைச்சகம், இண்டியா ஏஐ இம்பேக்ட் உச்சி மாநாட்டின் ஒருபகுதியாக இன்று புதுடெல்லியில், கடலியல் ஆய்வுகளின் ஏஐ எதிர்காலம் குறித்து, உயர்நிலை விவாத நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது. கடல் மேலாண்மை, கடல்சார் வாழ்வாதாரம், நீலப் பொருளாதாரத்தின் வளர்ச்சி, மற்றும், பேரிடர் சம்பவங்களை எதிர்கொள்வதற்கான நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்துவதில்,

செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்களிக்க முடியும் என்று, துறை சார்ந்த நிபுணர்கள், இந்நிகழ்ச்சியின் போது கருத்து வெளியிட்டனர். பருவநிலை மாற்றத்தில், பெருங்கடல்களுக்கு முக்கிய பங்கு இருப்பதால், ஏஐ மூலமான கடல் நிர்வாகத்தினால், புயல் போன்ற அபாயங்களை முன்கூட்டியே கணிக்கும் திறன்களும் வலுப்பெறும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமை இயக்குநர் டாக்டர் மகபாத்ரா தமது உரையில் கூறினார்.

----------------------

*ஏஐ-ராதாகிருஷ்ணன் (8)*

இண்டியா ஏஐ உச்சி மாநாட்டில், இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆற்றிய உரை, செயற்கை நுண்ணறிவு குறித்து இந்தியாவின் பொறுப்பான தொலைநோக்கு அணுகுமுறையை பிரதிபலிக்கும் வகையில் அமைந்து இருப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். மனிதனை மையமாக கொண்ட தொழில்நுட்ப வளர்ச்சியை வலியுறுத்தும் வகையில் இந்தியாவின் MANAV கொள்கை குறித்து பிரதமர் பேசி இருப்பதையும், குடியரசுத் துணைத் தலைவர் வரவேற்றுள்ளார்.

----------------------